Registered as News Paper　பக்கங்கள் 04　விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் நினசரி

நாதம்: 02　திருவள்ளுவர் ஆண்டு 2022　கார்த்திகை 01　(17 - 11 - 1991)　ஞாயிற்றுக்கிழமை　ஓசை: 272

## காங்கேசனில் இரு வாரங்களில் உணவுக் கப்பல்கள்

காங்கேசன்துறை துறைமுகத்தை திறப்பது சம்பந்தமாக விடுதலைப்புலிகளுக்கும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து பெரும்பாலும் இன்னும் இருவாரங்களுக்குள் உணவுக் கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்கும். கடந்த வியாழக்கிழமை கொழும்பில் கூட்டுப்படை (4ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு தொண்டமான் கடிதம்

# பேச்சுக்கான சூழல் விரைவில் உருவாகும்

# புலிகளின் நிலை நம்பிக்கையூட்டுகிறது

## ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளுடன் பேசுகிறேன் மேலதிக யோசனைகளையும் அனுப்புகிறேன்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சமாதான முயற்சிக்கு நம்பிக்கையூட்டுவதாக இருப்பதாகவும், பேச்சுவார்த்தைக்குரிய நல்லதோர் சூழ்நிலை விரைவில் உருவாகுமென்றும் அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவுக்கு அனுப்பிவைத்த பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் தெரிவித்த யோசனையை ஜனாதிபதியின் கவனத்திற்கு சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்த திரு. தொண்டமான் மேலும் விரிவாக்கப்பட்ட யோசனைகளையும் புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அமைச்சர் தொண்டமானுக்குச் சென்றமாதம் 31 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் அரசியல் தீர்வு சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கியிருந்தார். இதற்குப் பதிலாக திரு. தொண்டமான் அனுப்பிய கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் நேற்று விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக யோசனைகள் அடங்கிய இன்னொரு விரிவான கடிதம் கொழும்பில் தமக்கு கையளிக்கப்பட்டிருப்பதாகவும் அது ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணம் வந்துசேருமெனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி புலிகளிடம் தெரி (3ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் தியாகங்கள் விடிவிற்கு ஒளியாகட்டும்

தங்கள் தேசத்தை விட தேசம் தைப்பெரிதென எண்ணி பலவரலாற்றுத்தியாகங்களை புரிந்துள்ளனர் எத்தனையோ மாவீரர்கள். இவர்களின் தியாகங்கள் நாளை எங்கள் விடிவிற்கு ஒளியாகட்டும். மக்கள் அனைவரும் ஒருமித்துதம்கரம் கொண்டு போராட்டத்தைப் பலப்படுத்தி மாவீரர் கனவுகளை நனவாக்கட்டும் என்று தமிழீழ மாவீரர் நாள் பணிமனையினர் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் அச்செய்திக் குறிப்பில்,

ஒவ்வொரு வீரர்களும் (4ஆம் பக்கம் பார்க்க)


## யுத்தம் முடிவுக்கு வந்தால் சம்பள உயர்வாம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தம் முடிவுக்கு வருமானால் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் மாதாந்தம் ரூபா ஐநூறு சம்பள உயர்வு வழங்கப்படலாம் என்று தபால் தந்தித் தொலைத்தொடர்பு அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# பிரபாகரனின் நல்லெண்ண முயற்சிக்கு தென்னிலங்கையில் வரவேற்பு



## அடுத்தமாத முதல்வாரத்தில் சிங்களவர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

போர்க் கைதிகளாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 40 சிங்களப் பொலி... நல்லெண்ண முயற்சிக்கு தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இத... புள்ளது.

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் சர்வதேச செஞ்சிலு... கள் கப்பல் மார்க்கமாக யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்...

## கட்டுவனில் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா...

# ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளுடன் பேசுகிறேன் மேலதிக யோசனைகளையும் அனுப்புகிறேன்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சமாதான முயற்சிக்கு நம்பிக்கையூட்டுவதாக இருப்பதாகவும், பேச்சுவார்த்தைக்குரிய நல்லதோர் சூழ்நிலை விரைவில் உருவாகுமென்றும் அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவுக்கு அனுப்பிவைத்த பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் தெரிவித்த யோசனையை ஜனாதிபதியின் கவனத்திற்கு சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்த திரு. தொண்டமான் மேலும் விரிவாக்கப்பட்ட யோசனைகளையும் புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அமைச்சர் தொண்டமானுக்குச் சென்றமாதம் 31 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் அரசியல் தீர்வு சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கியிருந்தார். இதற்குப் பதிலாக திரு. தொண்டமான் அனுப்பிய கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் நேற்று விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக யோசனைகள் அடங்கிய இன்னொரு விரிவான கடிதம் கொழும்பில் தமக்கு கையளிக்கப்பட்டிருப்பதாகவும் அது ஒரிரு தினங்களில் யாழ்ப்பாணம் வந்துசேருமெனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி புலிகளிடம் தெரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் தியாகங்கள் விடிவிற்கு ஒளியாகட்டும்

தங்கள் தேசத்தைவிட தேசமதைப் பெரிதென எண்ணி பலவரலாற்றுத்தியாகங்களை புரிந்துள்ளனர் எத்தனையோ மாவீரர்கள். இவர்களின் தியாகங்கள் நாளை எங்கள் விடிவிற்கு ஒளியாகட்டும். மக்கள் அனைவரும் ஒருமித்துதம்கரம் கொண்டு போராட்டத்தைப் பலப்படுத்தி மாவீரர் கனவுகளை நனவாக்கட்டும் என்று தமிழீழ மாவீரர் நாள் பணிமனையினர் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் அச்செய்திக் குறிப்பில்,

ஒவ்வொரு வீரர்களும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் முடிவுக்கு வந்தால் சம்பள உயர்வாம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தம் முடிவுக்கு வருமானால் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் மாதாந்தம் ரூபா ஐநூறு சம்பள உயர்வு வழங்கப்படலாம் என்று தபால் தந்தித் தொலைத்தொடர்பு அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# பிரபாகரனின் நல்லெண்ண முயற்சிக்கு தென்னிலங்கையில் வரவேற்பு

## அடுத்தமாத முதல்வாரத்தில் சிங்களவர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

போர்க் கைதிகளாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 40 சிங்களப் பொலிசாரின் பெற்றோர், உறவினர் யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதி வழங்கி தலைவர் பிரபாகரன் காட்டிய நல்லெண்ண முயற்சிக்கு தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து பெற்றோர் உறவினரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க சிறிலங்கா அரசு இணங்கியுள்ளது.

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் சுமார் 100 சிங்கள மக்கள் கப்பல் மார்க்கமாக யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் விடுதலைப் புலிகளுமா



கச் சேர்ந்து இவர்களது தங்கு வசதிகளை ஒழுங்கு செய்வர்.

## கட்டுவனில் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா இராணுவத்தால் தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இரவு எட்டு மணியளவில் அங்கு நிலைகொண்டுள்ள படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வீமன்காமம் பகுதியில் இராணுவத்தினரால் நேற்று ஆர். பீ. ஜீ. தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது அதன் சேத விபரம் அறியப்படவில்லை.

**இலவசஇணைப்பு**
**1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.**

## கடமைக்கு திரும்பாதோர் பதவி பறிபோகும்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தீவுகள் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, தீவுகள் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்பவற்றிலும், மன்னார் மாவட்டத்தில் மன்னார், உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நிலைமைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

எனவே இப்பகுதிகளிலுள்ள கூட்டுத்தாபனங்கள், மற்றும் அரச திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் நாளை திங்கட்கிழமைக்கு முன்னதாக வேலைக்கு சமுகமளிக்க வேண்டுமென அரசாங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களை விழிப்படையசெய்வது கலைஞர்களின் கடமை

—கோ. மகேந்திரராசா



எங்கள் விடுதலைப் போரில் எம் முன்னே உள்ள கடமைகள் அளப்பரியன. அவற்றில் கலைஞர்களின் பங்களிப்பு நம் எல்லோராலும் எதிர்பார்க்கப்படுவது.

புலிகளின் குரல் வானொலி ஓராண்டு நிறைவையொட்டி கலைஞர் ஒன்று கூடல் நிகழ்வு நேற்று நிதர்சனம் செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு. கோ. மகேந்திரராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமது மக்கள் தாம் அடிமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என அறியாத நிலையை மாற்றி அவர்களை விழிப்படைய வைத்து, சுதந்திரஉணர்வுள்ளவர்களாக்க வேண்டிய பொறுப்பு இக்கலைஞர்களுடையது என்று மேலும் அங்கு தெரிவித்த அவர் கலைஞர்கள் எனப்படுபவர்கள்எமதுபோராட்டத்தில் போராளிகளாகவும் சிந்தனைச் சிற்பிகளாகவும் செயற்படக்கூடியவர்களாக உள்ளனர் என்று குறிப்பிட்டார்.

## சுதந்திரக் கட்சியில் சேர சந்திரிகா விண்ணப்பம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்வதற்கு திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்க விண்ணப்பம் செய்துள்ளார். திரு. திருமதி பண்டாரநாயக்கா தம்பதிகளின் புதல்வியும், சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவரும், சினிமா நடிகருமான காலஞ்சென்ற விஜய குமாரணதுங்கவின் மனைவியுமான திருமதி சந்திரிகாவின் விண்ணப்பம் முன்னுரிமை கொடுத்துப் பரிசீலனை செய்யப்படுவதாக கட்சிவட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது

# தனி. வர்த்தக நிலையங்களில் பங்கீட்டுப் பொருள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கு தனியார் வர்த்தக நிலையங்களுக்கு இன்றுமுதல் அனுமதிவழங்கப்பட்டிருக்கின்றது.

தனியார் வர்த்தகரை அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்திற்கு அனுமதிப்பது தொடர்பாகவும், மேற்படி பொருள்களின் மூன்றாவதுவார விநியோகம்தொடர்பாகவும் நேற்று யாழ். செயலகத்தில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விவாகப் பொருத்துனர் சேவை நிலையம்

மேலை நாடுகளில் உயர்பட்டம் பெற்ற பொறியியலாளர் ஆங்கில வைத்தியர்கள் வெளிநாடுகளில் சாதாரணதொழில் புரிவோர் ஆகியோரது ஜாதகங்கள் நூற்றுக்கணக்கானவை எம்மிடம் உண்டு. தொடர்பு க. ஆ. தர்மலிங்கம் 24, புறாடி லேன் கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம். (R/1932)

### கோழி முட்டை

கோழி முட்டைகள் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். முட்டைகள் வழங்குவோருக்கு சலுகை விலையில் கோழித்தீன் விற்பனை செய்யப்படும். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் 1. கலாசாலைவீதி, திருநெல்வேலி கிழக்கு 2. சமூக சேவைகள் நிலையக்கட்டடம் மீசாலை வடக்கு. (B/3481)

### கல்வி

G. C. E. (O/L) ல் கட்டாயபாட மாகியகணிதபாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 40 மணித்தியால தீர்வுகள் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யோகேந்திரா வீதி, கண்டுக்குளி. (R/1936)

## சிங்கப்பூர் விமானத்தில் வெடிகுண்டுப் புரளி கொழும்பில் தரையிறக்கம்

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து சென்னை மீனம்பாக்கம் நோக்கிப்பறந்து சென்று கொண்டிருந்த சிங்கப்பூர் எயார் லைன்ஸ் விமானமொன்று கடந்த வியாழக்கிழமை கொழும்பில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இவ்விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே கொழும்பில் தரையிறக்கப்பட்டது பின்னர் வேறு விமானத்தில் பயணிகள் பிரயாணத்தைதொடர்ந்தனர் எனினும் வெடிகுண்டு இருப்பதாக சொல்லப்பட்டமை வெறும் புரளியே எனப் பின்னர் தெரிய வந்தது.

## சுயதொழிற் பயிற்சி நெறி

பண்டத்தரிப்பின் திரு. அல்போன்சஸ் என்பவர் மாதம் இருபதினாயிரம் ரூபாவிற்கு மேலாக சுயதொழில் மூலம் வருமானம் பெறுகின்றார்.

அதேபோல் வருமானம் பெறும் தொழில்புரிய ஏன் நீங்கள் முன்வரலாகாது?

ஏன் தொடர்ந்தும் தென்னிலங்கையிலிருந்து சீனியை எதிர்பார்த்து நாம் வாழ வேண்டும்?

எள் தாராளமாக எமது மண்ணில் உண்டு. மனம் கொண்டு இளைஞர்கள் முன்வந்தால் சீனியின் தன்னிறைவு பெற வசதி உண்டு.

3 மாத காலப்பயிற்சி நெறியில் நீங்கள் தொழில் வல்லுனராகிவிட முடியும்.

மாதம் உணவு, இருப்பிட வசதிகளுடன் 1000 ரூபா ஊக்குவிப்புப்படியும் எம்மால் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-91.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம்,
வண்ணார்பண்ணை,
25, பொன்னப்பா வீதி,
யாழ்ப்பாணம்.

(B/3470)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடம்

பதவி: "பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி" (தற்காலிகம் / ஒப்பந்தம்)

சம்பளம்: கல்வித்தகைமைகள் / அனுபவங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

கல்வித்தகைமைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி (எம். பி. பி. எஸ்.) பட்டம் பெற்றவர்.

அல்லது

2. பதிவு செய்யப்பட்ட மருத்துவர் / உதவி மருத்துவர் (ஆர் எம்.பி. / ஏ. எம்.பி.) க்கான கல்வித் தகைமை பெற்றவர்.

மேற்படி கல்வித்தகைமைகளைக் கொண்ட அரச, தனியார் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பெயர், முகவரி, கல்வித்தகைமை, வேலையனுபவம், வயது போன்ற விபரங்களைக் கொண்ட விண்ணப்பத்தினை இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் உதவிப் பதிவாளரிடம் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 1991-11-29 ம் திகதிக்கு முன் சேர்க்கவும்.

பதில் வைத்திய (Relief) அதிகாரியாகக் கடமையாற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் நாள் ஒன்றுக்கு எவ்வளவு சம்பளம் கோருகின்றார்கள் என்ற விருப்பத்தினையும் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

பதிவாளர்

(B/3488)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம்

வியாபாரிமூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம் 15-11-91 இல் காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற திரு. இ. க வைத்திலிங்கத்தின் மனைவியாவார். இவரது சமயக் கிரியைகள் 27/11. இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர் மடத்தில் இருந்து 17-11-91 ஞாயிறு பி. ப. 2 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

திருமதி றோ. இராஜசிங்கம்
[நூலகம் யாழ். பல்கலைக்கழகம்]

திரு. வ. நந்தகுமார்
[புவியியற்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்]

[R/1935]

## புகைப்படப் பிடிப்பாளர் கலந்துரையாடல்

மாவீரர் நாள் சம்பந்தமாக புகைப்படப் பிடிப்பாளர்களின் கலந்துரையாடல் நாளை (18-11-91) மாலை 4 மணிக்கு அருச்சுனா வீதியில் அருச்சுனா செயலகத்தில் நடைபெறும்.

கடந்த மாதம் கலந்து கொண்ட புகைப்படக் கலைஞர்களுடன் கலந்து கொள்ளாத புகைப்படக் கலைஞர்களும் கலந்து கொண்டு மாவீரர் நாளை மேலும் சிறப்பிக்க உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

பொறுப்பாளர்
அருச்சுனா

அருச்சுனா வீதி,
பலாலி வீதி,
திருநெல்வேலி

(R/1938)

## 21-வது பிறந்த தினமும் 460-வது நினைவு நாளும்



வல்லையில் மலராய்
17-11 1970

கோட்டையில்
வரலாறாய்
05 08-1990

வீரவேங்கை மாதுரி

## திகதி நீடிப்பு

(நமது நிருபர்)

மாவீரர் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்தும் இலக்கியப் போட்டிகளின் முடிவுத் திகதி எதிர்வரும் பதினெட்டாம் திகதி (18 11 91) வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே கடைசி நேரத்தில் அனுப்பத் தவறியோர், அனுப்ப முடியாமல் போய்விட்டதே என்ற கவலையுடன் இருப்போர் மேற்படி திகதிக்கு முன்னர் திருநெல்வேலி பணிமனையிலுள்ள மாவீரர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## 105ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 17

1987 ஆம் ஆண்டு இந்நதினத்தில் பண்டத்தரிப்பு தொட்டிலடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

சந்திரபாபு (சலமோசன் நிர்சன் - இந்திரபுரம்,

### கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாயபாடமாகிய கணிதபாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 40 மணித்தியால திறருகு விஷேட சித்திக்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யோகேந்திர வீதி, சுண்டுக்குளி.

(R/1936)

3 மாத காலப்பயிற்சி நெறியில் நீங்கள் தொழில் வல்லுனராகிவிட முடியும்.

மாதம் உணவு, இருப்பிட வசதிகளுடன் 1000 ரூபா ஊக்குவிப்புப்படியும் எம்மால் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-91.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம்,
வண்ணார்பண்ணை,
25, பொன்னப்பா வீதி,
யாழ்ப்பாணம்.

(B/3470)

மருத்துவர் / உதவி மருத்துவர் (எம்.பி. / ஏ.எம்.பி.) க்கான கல்வித் தகைமை பெற்றவர்.

மேற்படி கல்வித்தகைமைகளைக் கொண்ட அரச, தனியார் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பெயர், முகவரி, கல்வித் தகைமை, வேலை அனுபவம், வயது போன்ற விபரங்களைக் கொண்ட விண்ணப்பத்தினை இப்பக்கலைக் கழகத்தின் தாயகக் கிளையின் உதவிப் பதிவாளரிடம் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 1991-11-29 ம் திகதிக்கு முன் சேர்க்கவும்.

மதிப்பு வைத்திய (Relief) அதிகாரியாகக் கடமையாற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் நாள் ஒன்றுக்கு எவ்வளவு சம்பளம் கோருகின்றார்கள் என்ற விருப்பத்தினையும் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

பதிவாளர்

(B/3488)

மாவீரர் நாள் சம்பந்தமாக புகைப்படப் பிடிப்பாளர்களின் கலந்துரையாடல் நாளை (18-11-91) மாலை 4 மணிக்கு அருச்சுனா வீதியில் அருச்சுனா செயலகத்தில் நடைபெறும்.

கடந்த மாதம் கலந்து கொண்ட புகைப்படக் கலைஞர்களுடன் கலந்து கொள்ளாத புகைப்படக் கலைஞர்களும் கலந்து கொண்டு மாவீரர் நாளை மேலும் சிறப்பிக்க உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

பொறுப்பாளர்
அருச்சுனா

அருச்சுனா வீதி,
பலாலி வீதி,
திருநெல்வேலி

(R/1938)

## 21-வது பிறந்த தினமும் 460-வது நினைவு நாளும்



வல்வையில் மலராய்
17-11 1970

கோட்டையில்
வரலாறாய்
05 08-1990

### வீரவேங்கை மாதுரி

எதிரியின் காவல் அரண்களைத் தாண்டி
ஏறி நடந்தீர்!
எதிரியின் கோட்டை மதில்களில் ஏறி
எழுந்து நிமிர்ந்தீர்!
புலியெனப் பாய்ந்து புறச்சுவர் கடந்து
புகுந்து மடிந்தீர்!
போர்க்களம் ஆடிப் புதியதோர் பரணி
பிறந்திடச் செய்தீர்!
விழுந்த எம் வேங்கையே ... ...
புதைகுழியில் தூங்கம்மா!
பொழுது விடிந்தது
கோட்டைக்கதவுகள் உடைந்தது
உனது அணியினர் எதிரியை விரட்டியடித்தனர்
உங்கள் புதைகுழி உயிர் பெற்றதம்மா!
நீவிர்!
விழுந்தவர்களே அல்ல
எழுந்தவர்கள்!

05-08-1990 அன்று இவருடன் கோட்டையில் வீரமரணமடைந்த அனைத்து வீரவேங்கைகளுக்கும் எமது வீர வணக்கங்கள்.

'பாலசரானந்தவேல் இல்லம்'
'கார்த்திக்வீதி'
வல்வெட்டித்துறை.

உம்பிரிவால் துயருறும்
மாமா, மாமி, அக்கா
தம்பி, மைத்துனிமார்,
அத்தை, சின்னமாமா,
அப்பாச்சி, அரவிந்தன்.

(R/1933)

## திகதி நீடிப்பு

(தமது நிருபர்)

மாவீரர் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்தும் இலக்கியப் போட்டிகளின் முடிவுத் திகதி எதிர்வரும் பதினெட்டாம் திகதி (18.11.91) வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே கடைசி நேரத்தில் அனுப்பத் தவறியோர், அனுப்ப முடியாமல் போய்விட்டதே என்ற கவலையுடன் இருப்போர் மேற்படி திகதிக்கு முன்னர் திருநெல்வேலி பணிமனையிலுள்ள மாவீரர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## 105ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாயக மண்ணில்
மலர்வு
10.10.1973

தமிழீழ
மீட்பிற்காய்
மடிவு
05.08.1991

கப்டன் லக்ஷி
(முத்துலிங்கம்—
தங்கரஜனி சுதா)

ஈழத்தில் புலி உறுமல் தொடர்ந்து கேட்கும் - அது
இடையிடையே லக்ஷி என்று உனை அழைக்கும்
ஈழவர்கள் வரலாற்றில் உங்கள் வீரம்
இனிப் பிறக்கும் சந்ததிக்கு எழுதிவைப்பார்
மாற்றானை மண்டியிடேன் என்று சொன்னாய் - நஞ்சு
மாலையினை உன் கழுத்தில் மாட்டி நின்றாய்
ஈழத்தில் தமிழ் வாழ வேண்டுமென்றாய் நீங்கள்
எழுந்து புலிப் பாசறைக்கு வாருமென்றாய்

17 - 11 - 91 (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள், பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி
உடுத்துறை

(R-1874)

இவரது பிரிவால் வாடும்
- குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 11 - 17

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் பண்டத்தரிப்பு தொட்டிலடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

சந்திரபாபு (சவேரியன் நிக்சன் - இந்திராபுரம், மனை)

1988 ஆம் ஆண்டு கோண்டாவிலில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம் லெப். ஜோண் (ஆரோக்கியம் இருபா - பெரிய கடைக்காடு)

அம்பாறை, பொத்துவில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

முள்ளைத்தீவில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு வசாவிளானில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம் லெப். றோம் (தர்மராசா - நாவலப்பிட்டி)
றோய்

திருக்கோணமலை திரியாய்ப் பகுதியை முற்றுகையிட முற்பட்ட சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

கப்டன் வாசு (ச. பரமேஸ்வரன் - 6 ஆம் வட்டாரம், சாம்பல் தீவு, திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு
கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3483)

# தமிழர் தேசிய போராட்டத்தை நசுக்க உணவை ஆயுதமாக்கும் சிறிலங்கா

தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தனது இறுதிக் கட்ட நடவடிக்கையை சிறிலங்கா ஆரம்பித்துள்ளது. வடக்கை தனியாக இராணுவ நடவடிக்கையின் மூலம் வெற்றி கொள்ள முடியாது. அரசியல், இராணுவ, பொருளாதார ஒருங்கிணைந்த நடவடிக்கையின் மூலமே வெற்றி கொள்ள முடியும் என சிங்கள பேரினவாத புத்திஜீவிகளின் திட்டத்திற்கேற்ப தற்பொழுது வடக்கு மீது ஒருங்கிணைந்த நடவடிக்கை ஒன்றை சிறிலங்கா அரசாங்கம் செயற்படுத்தியுள்ளது.

## பட்டினி போட்டு பணிய வைக்கும் முயற்சி

பட்டினி போட்டு பணிய வைத்தல் அல்லது தோற்கடித்தல் என்பதே இவ் ஒருங்கிணைந்த நடவடிக்கையின் இலக்காகும். இது சிறிலங்கா அரசாங்கத்தின் இறுதியுத்த வடிவம் என்றே சொல்லலாம். அதாவது கடந்த ஒன்றரை வருடங்களாக சிறிலங்கா இராணுவத்தினால் சாதிக்க முடியாததை முற்றுகையின் மூலம் சாதித்து விடலாம் என சிறிலங்கா அரசாங்கம் கருதுவதினால் இதனை இறுதி யுத்த வடிவம் என்று கூறுவதில் தவறில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு சுமார் 10 லட்சம் மக்களைக் கொண்டது. கடந்த வருடம் போர் ஆரம்பமானதில் இருந்து தீவிர பொருளாதார முற்றுகையின் கீழ் உள்ளது. பொருளாதாரத்தடை, எரிபொருள், மின்சாரம் என்பவற்றின் தடை என்பதால் பெருமளவு மக்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இதனால் மக்கள் தமது ஜீவனோபாயத்தை நடத்த முடியாமல் அகதி முகாம்களில் அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் தற்பொழுது 2,25 000 மக்கள் அகதிமுகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இது தற்பொழுதுள்ள யாழ்மாவட்ட குடித் தொகையில் 25 வீதத்திற்கு மேலான அளவாகும். இவ் அகதி முகாம்களில் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மாரில் நூறு வீதமானோரும் முழுமையாக ஊட்டச்சத்துக் குன்றியவர்களாகக் காணப்படுகின்றனர். சிறார்களும், பாலூட்டும் தாய்மார்களும் அவ்வாறே காணப்படுகின்றனர்.

## திட்டமிட்ட நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியானது சிறிலங்கா அரசாங்கத்தினால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதொன்றாகும். கடந்த ஒன்றரை வருடமாக பொருளாதார முற்றுகையில் இருக்கும் யாழ். குடாநாட்டிற்கு சுமார் மூன்றில் ஒரு பகுதி உணவுப் பொருள் பருத்தித்துறை துறைமுக மூலமாகவே வந்தது. மிகுதியில் ஒரு பகுதி உணவுப் பொருள் தரைவழிப் பாதையூடாக லொறிகள் மூலமும், சைக்கிள்கள் மூலமாகவும் வந்தன.

கடந்த ஒருவருடமாக வடபகுதி மீது பொருளாதாரத் தடையும், எரிபொருள், மற்றும் மின்சாரத்தடையும் இருந்தமையாலும் பொருட்களின்விலை மிக உயர்ந்தளவில் இருந்தமையாலும் மக்களிடம் பெரியளவில் வாங்கும் சக்தியும் குறைவடைந்திருந்தது. இதனால் மக்கள் உயிர்வாழ்வதற்கான குறைந்தளவு உணவை உட்கொள்வதற்கே போராட வேண்டியிருந்தது. இந்நிலையில் உணவுப் பொருள் விநியோகத்தை சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு தடைசெய்துள்ளமை மிருகத்தனமான ஒரு நடவடிக்கையாகும்.

கடந்த மாதம் யாழ் குடாநாட்டின் பிரதான தரைப்பாதைகளில் ஒன்றான சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையை இராணுவ நடவடிக்கையின் மூலம் மூடியதினால் யாழ். குடாநாட்டுக்குரிய முக்கிய பாதைகள் இரண்டையும் சிறிலங்கா அரசாங்கம் மூடியது. இதன் மூலம் தரை வழியாகவரும் உணவுப் பொருள்களின் விநியோகம் தடைப்பட்டது.

அதேவேளை கப்பல்கள் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தின் ஊடாக அனுப்பப்படும் உணவுப் பொருள்களையும் தாமதப்படுத்தியது. இதற்கு சீரற்ற காலநிலையும் ஒரு காரணமாக முன்வைக்கப்பட்டது இதேவேளை அத்தியாவசியமாகத் தேவைப்படும் உணவுப் பொருள்களை அனுப்பாமல் உரவகைகளை கப்பலில் ஏற்றி அனுப்பியுள்ளது. அதுவும் யாழ். மாவட்டத்திற்குரிய உரவகைகளும் அல்ல. தரை வழிப்போக்குவரத்துக்கள் மூடப்பட்டுள்ள நிலையில் உள்ள யாழ் குடாநாட்டிற்குள் குடா நாட்டிற்கு வெளியிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய உரத்தினை சிறிலங்கா அனுப்பிவைப்பதன் மூலம் வடக்கிற்குக் கப்பல்கள் அனுப்பப்படுகின்றனவென்ற பிரசாரத்தை செய்யும் அதே வேளையில் யாழ். மாவட்டத்திற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பயன்படாத வகையில் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது.

இதேவேளை காங்கேசன்துறை துறைமுகமூடாக குடா நாட்டிற்குள் பொருள்கள் எடுத்துவருவதற்கு விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்தும் இதுவரைக்கும் சிறிலங்கா காலதாமதப்படுத்தி வருகின்றது.

யாழ். குடாநாட்டின் மீது சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள 'முற்றுகை' காரணமாக தனியாக வெளி மாவட்டங்களில் இருந்துவரும் உணவுப் பொருள்களின் வருகை மட்டும் பாதிப்படையவில்லை. உள்ளூர் உற்பத்தியிலும் கணிசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக குடாநாட்டின் மீன்பிடி முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. தீவுப் பகுதியில் இருந்து கிடைக்கும் விவசாய உற்பத்திகளும் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

## பேரினவாத புத்திஜீவிகளின் திட்டம்

சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் சிலராலும் பேரினவாத சிங்கள புத்திஜீவிகள் மட்டத்திலும் கடந்த ஆண்டு போர் ஆரம்பிக்கப்பட்டபோதே தனியாக இராணுவ நடவடிக்கை மூலம் வெற்றிகள் ஈட்ட முடியாது என்ற கருத்து கெள்வியாக முன்வைக்கப்பட்டது. தமிழர் தேசிய போராட்டத்தை முறியடிக்க ஒருங்கிணைக்கப்பட்ட அரசியல், பொருளாதார, இராணுவ நடவடிக்கைகள் அவசியம் என வலியுறுத்தப்பட்டும் வந்தது.

இவர்களின் இவ் வற்புறுத்தலுக்கு ஏற்றாற் போன்றே அன்றைக்கால நிகழ்ச்சிகளும் அமைந்தன. இராணுவ ரீதியாக அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. இராணுவம் சில பகுதிகளில் முன்னேறினாலும் தமது நிலைகளைத் தொடர்ந்து பேணுவது சிரமமான காரியமாக இருந்தது. இந்நிலையில் பொருளாதார தடையை மேலும் தீவிரமாக்கி உணவு நெருக்கடியை உருவாக்கும் திட்டத்தில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் இவ்வுணவு விநியோகத் தடை மூலம் இராணுவ, அரசியல் வெற்றிகளை ஈட்ட முற்படுகின்றது இவ்வுணவு நெருக்கடி மூலம் தேசிய இனவிடுதலைப்போராட்டத்தில் தீவிரமாகவுள்ள மக்களின் கவனத்தை திசை திருப்ப முற்படுகின்றது. அதேவேளை இராணுவ நடவடிக்கையின் மூலம் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும் முற்படுகின்றது.

## கடமையும் உரிமையும்

சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கை மனித நேய அடிப்படையிலும் சரி, சிறிலங்காவின் கோட்பாட்டின்படியும் சரி (இலங்கை ஒரு நாடு) சர்வதேச விதிமுறைகளுக்கு விரோதமானதாகும். சிறிலங்கா அரசாங்கம் இலங்கையின் வடக்கு கிழக்குப்பாகம் தனது நிர்வாகத்தில் உள்ளது. இலங்கை ஒரு நாடு என சிறிலங்கா அரசாங்கம் கூறிவரும்வரை வடக்கு கிழக்கு மக்களுக்கு உணவு வழங்கும் கட்டுப்பாடும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு உள்ளது. இதனைப் பெற்றுக் கொள்ளும் உரிமையும் தமிழ் மக்களுக்கு உள்ளது.

இதேவேளை எவ்வகையான ஒடுக்குமுறை நடவடிக்கைகளும் ஒரு இனத்தின் தேசிய இனப்போராட்டத்தையோ அன்றி ஒடுக்குமுறைக்கான போராட்டத்தையோ ஒழித்து விட முடியாது. போராட்டங்களுக்கு எதிராக பிரச்சினைகளைத் திசைதிருப்பிவரும் நடவடிக்கைகள் மேலும் போராட்டங்களைத் தீவிரமாக்கியுள்ளனவே தவிர மழுங்கடிக்கச் செய்ததாக வரலாறு இல்லை. எத்தியோப்பியாவிலும் மேற்கு ஆபிரிக்காவிலும் அரசாங்கங்கள் போராட்டங்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியிலேயே முடிந்தன. இங்கு தனியாக அரசாங்கங்கள் மட்டும் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படவில்லை. இயற்கையும் சேர்ந்து போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டது. சுமார் பத்து வருடங்கள் தொடர்ந்து வரட்சியினால் எத்தியோப்பியா குடா பகுதியில் நிலவிய போதும் வரட்சியினாலும் போராட்டங்கள் தோல்வி அடையவில்லை. இதற்கு மக்களின் மன வலிமையே காரணமாக இருந்தது. அம்மக்களின் மனோதிடத்திற்கு இலங்கைத் தமிழ் மக்கள் எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். இதனைச் சிறிலங்கா அரசாங்கம் முதலில் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

## 3ஆம் கட்ட விநியோகத்துக்கான அட்டவணை

| பொருள் | 1 அங். | 2 அங். | 3 அங். | 4 அங். | 5 அங். | 6 அங். | 7 அங். | 8 அங். |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி | 11/2 கிலோ | 3 கிலோ | 4 கிலோ | 5 கிலோ | 6 கிலோ | 7 கிலோ | 8 கிலோ | 9 கிலோ |
| மா | 11/2 ,, | 3 ,, | 4 ,, | 5 ,, | 6 ,, | 7 ,, | 8 ,, | 9 ,, |
| சீனி | 1/2 ,, | 1/2 ,, | 3/4 ,, | 1 ,, | 11/4 ,, | 11/2 ,, | 13/4 ,, | 2 ,, |
| பருப்பு வகை | 1/2 ,, | 1 ,, | 1 ,, | 11/2 ,, | 2 ,, | 2 ,, | 2 ,, | 2 ,, |
| தேயிலை / கோப்பி | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் |
| பால் மா | 1 பக் | 1 பக் | 1 பக் | 1 பக் | 1 பக் | 1 பக் | 1 பக் | 1 பக் |

தனி வர்த்தக முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முடிவுகளும் புதிய விநியோக அட்டவணையும் மூன்றாம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

### விநியோக முறை

★ "ஆ", "உ" அட்டை உடைய ஒவ்வொரு குடும்பங்களுக்கும் மேற்படி அட்டவணையில் உள்ளவாறு உச்ச அளவு பொருள்களை பாவனையாளர் விரும்பும் வர்த்தக நிலையங்கள் அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகிக்க வேண்டும்.

★ இவ்வாறு விநியோகிக்கப்படும்பொழுது நுகர்வோர் தமக்கு அட்டவணையில் அளிக்கப்பட்ட பொருள்களைப் பகுதிபகுதியாகப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் இப்பொருள்கள் விநியோகிப்பதற்காக உலர்உணவு அட்டையுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் விநியோகிக்கும் வர்த்தக நிலையம் அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பெயரையும் விநியோக அளவு மற்றும் விநியோகத் திகதியையும் பதிவு செய்தல் வேண்டும்.

★ நுகர்வோர் தாம் விரும்பும் எந்த நிலையத்திலும் பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியும் எந்த வர்த்தக நிலையங்களாயினும் தமது கையிருப்பில் உள்ள பொருள்களையும், விலைப்பட்டியலையும் தமது விளம்பரப் பலகையில் அறிவித்தல் வேண்டும்.

★ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவ் விநியோகத்திற்கு தம்மால் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது தமது கையிருப்பில் உள்ள பொருள்களை விநியோகத்திற்கு உபயோகித்தல் வேண்டும்.

மேலும் ப. நோ. கூ. சங்கங்களும் தனியார் வர்த்தகர்களும் இந்த விநியோகத்திற்கு மேலதிக பொருள்கள் தேவைப்படின் அவற்றை வெளியே கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்காக இவர்கள் பிரதேச பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

★ எந்த வர்த்தக நிலையங்களிலும் கடந்தமாதம் 21ஆம் திகதி சந்தையில் நிலவியதுக்குக் கூடிய விலையின் அடிப்படையிலேயே விநியோகிக்கப்பட வேண்டும். விலை அதிகரிப்பு அனுமதிக்கப்பட மாட்டாது.

★ கருமப் பணம் பெறும் குடும்பங்களுக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கட்டுப்பாட்டு விலைக்கு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. இதற்குத் தேவையான உணவுப் பொருள்களை யாழ். செயலக புனர்வாழ்வுக் கிளை ப. நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கும்.

★ வெளிச் சந்தையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்களில் இருந்து ப. நோ. கூ. சங்கங்களினால் விநியோகிக்கப்பட வேண்டும் என்று பிரதேச பாவனையாளர் பாதுகாப்புக் குழு கருதுமிடத்து அவ்வாறு கருதும் குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பாக யாழ். செயலகத்துக்கு அறிவிக்க வேண்டும். இக் குடும்பங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் எனத் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## பேச்சுவார்த்தைக்கான விருந்துள்ளார். கலந்தாலோசனை நடத்தும் கட்டம்

இதற்கிடையில், தனது சமாதான முயற்சி பற்றி கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்த திரு தொண்டமான், புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு சரியான சூழ்நிலை உருவாகியிருப்பதாக குறிப்பிட்டார். 'இப்பொழுது கலந்தாலோசனை நடத்தும் கட்டத்தில் இருக்கின்றோம். அடுத்த கட்டத்தில் பேச்சுவார்த்தைகள் தொடரலாம்' என்று அமைச்சர் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் யோசனைகள் குறித்து தாம் ஜனாதிபதியுடனும் எதிர்க் கட்சிகளிடமும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசா அரசிற்கு எதிராக தொழிற்சங்கப் போராட்டங்கள்

(கொழும்பு)

தென்னிலங்கையில் பிரேமதாசா அரசாங்கத்திற்கெதிரான தொழிற்சங்கப் போராட்டங்கள் தீவிரமடைந்துவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏரிக்கரைப்பத்திரிகை விதான ஊழியர்கள்சென்றவாரம் சில கோரிக்கைகளை முன் வைத்து வேலைநிறுத்தம்செய்தனர்.

போனஸ் தொடர்பான கோரிக்கைகள் தவிர மற்றக் கோரிக்கைகள் நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

தொழிலாளரின் முக்கிய கோரிக்கையான போனஸ் பற்றி நிர்வாகம் மௌனம் சாதிப்பதால் நாளை முதல் ஊழியர் மறுபடியும் வேலை நிறுத்தம் செய்யவுள்ளனர்.

இதேசமயம் கப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கொழும்பில் தலைமைக் காரியாலயத்தின் முன் மறியல் செய்துவருகின்றனர்.

அரச நிறுவனங்களை மக்கள் மயமாக்குவதை எதிர்த்தும், வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருவதனால் வாழ்க்கைப்படி வழங்கும் படியும், மற்றும் போனஸ் ஆகியன ஊழியர்களின் முக்கிய கோரிக்கைகளாகும்.

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதிக்க உள்ளனர்.

1981 ஜுலைமாதத்திற்குப் பிறகு கொழும்பில் வேலை நிறுத்தச் சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டிருப்பது இது முதற்தடவையாகும்.

இதேவேளை கொழும்பு வைத்தியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர்களுக்கு உதவியாகப் பணிபுரியும் ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதிக்கலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ. தே. கட்சியின் உள்ளே தோன்றி கண்ட சக்திகள், தொழிற்சங்கங்கள் உள்ளே ஊடுருவி அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தூண்டிவிடுவதில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

மாவீரர்களின்

தாயக மண்ணுக்காய் களம் சென்று மறைந்தாலும், ஒவ்வொருவரின்வாழ்விலும் மறைவிலும் தனித்துவம் உண்டு. அந்தத் தியாகிகளின் வரலாற்றை பின்னோக்கிப் பார்ப்போமானால் - முருங்கன்காட்டில் பொலிஸ் உளவுப்படையினரால் எமது முகாம் முற்றுகைக்கு உள்ளான போதும் ஆயுதங்களோ சயனைட்டோ அற்ற நிலையில் சாதுரியமாகவும், துணிவுடனும் எதிரியை எதிர் கொண்டு அழித்து போராட்டத்தினை முளையிலே அழியவிடாது காப்பாற்றிய திரு. செல்லக்கிளி அம்மானை எண்ணிப் பாருங்கள்.

மீசாலை முற்றுகையின் போது காயமடைந்த நிலையிலும் தன்னிடம் இருந்த ஆயுதத்தின் ரவைகள் தீரும் வரை சுட்ட பின்னர் ஆயுதத்தையும் போராட்ட இரகசியங்களைக் காப்பாற்றுவதற்காகவும் சக போராளியைப் பார்த்து தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்துடன் தப்பிப் போகும்படிகூறிய திரு. சீலனின் தியாகத்தின் உயர்வைஎண்ணிப்பாருங்கள்.

ஆயுத வாகனம் பின்னேவர முன்னால் மோட்டார் வாகனத்தில் நிலைமைகளை அவதானித்துக் கொண்டு சென்ற போது எதிர்பாராத விதமாக குறுக்கேவந்த இராணுவத்தை சந்திக்க நேர்ந்த போது தன் இலக்கினை மாற்றி எதிரியை திசை திருப்பி தன் உயிரைக் கொடுத்து சக போராளிகளையும், ஆயுதங்களையும் காப்பாற்றிய திரு. ரஞ்சன்லாலாவின் அர்ப்பணிப்பு உணர்வினை எண்ணிப் பாருங்கள்.

அடம்பன் மண்ணை ஆக்கிரமிக்க வந்த சிங்கள இராணுவத்தினர் பலரைக் கொன்று பல ஆயுதங்களைக் கைப்பற்றி இரண்டு இராணுவத்தை உயிருடன் பிடித்து, போராட்டத்தில் ஓர் திருப்பு முனையை ஏற்படுத்தி வீரச்சாவடைந்த விக்ரரை எண்ணிப்பாருங்கள்.

புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டு பிடித்து போராட்டத்தில் புதுப்பொலிவை ஏற்படுத்திய திரு. பொன்னம்மான் போர்முனையில் ஒரு கையை இழந்த பின்னரும் மறுகரம் கொண்டு போர்முனைகளில் வெற்றிகளைப் படைத்த திரு. நவதீதை (டடி) எண்ணிப் பாருங்கள்.

இவர்கள் வழியில் எத்தனையோ மாவீரர்கள் தங்கள் தேசத்தைவிட இந்தத்தேசமே பெரிதென எண்ணி பல வரலாற்றுத் தியாகங்களைப் புரிந்துள்ளனர்.

இவர்களின் தியாகங்கள் நாளை எங்கள் விடிவிற்கு ஒளியாகட்டும். மக்கள் ஒருமித்து தம் கரம் கொண்டு போராட்டத்தை பலப்படுத்தி மாவீரர் கனவை நனவாக்கட்டும் என்றும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

---

இடம்பெயர்ந்த தீவக மக்கள்

# குறைகளை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டப் பேரணி

(புங்குடுதீவு)

இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கும் தீவக மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி, நாளை திங்கட்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர். காலை ஒன்பது மணியளவில் ஒவ்வொரு முகாம்களில் இருந்தும் மக்கள் ஊர்வலமாகச் சென்று, சென் ஜோன்ஸ் கல்லூரிச் சந்தியில் இணைந்து பேரணியாக யாழ். செயலகம் முன்றலை சென்றடைவார்கள். அங்கு மறியல் போராட்டம் ஒன்றை நடாத்திய பின்னர் தீவக மக்களின் குறைகள் பற்றிய, தீவக மக்கள் அனைவரும் கையெழுத்திட்ட மகஜர் கையளிக்கப்படும்.

(22)

---

பிராந்தியத்தில்

# முடிவற்ற சண்டை; பாக். முயற்சி ஏற்படுத்தும்

## இந்தியா எச்சரிக்கை

(டில்லி)

இந்தியாவில் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்த பாகிஸ்தான் ஏற்படுத்தும் எந்தவொரு முயற்சியும் இப்பிராந்தியத்தில் முடிவற்ற சண்டையை உருவாக்கும் என்று புதுடில்லி அமெரிக்காவிடம் எடுத்துக் கூறியுள்ளது.

இக் கூட்டத் தொடருக்கான இந்தியாவின் ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதி ஏ. பி. வாஜ்பாய் ஐநாவின் அமெரிக்கத் தூதுவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் ஜம்மு காஷ்மீர் பகுதி இந்தியாவிற்கே உரியது என்பதை சுட்டிக்காட்டியுள்ளதுடன் இது சர்ச்சைக்குரியதல்ல என்றும் கூறியுள்ளார். இந்தப் பகுதிகளில் வன்முறைகளைத் தூண்டிவிட பாகிஸ்தான் எடுக்கும் முயற்சிகளை இந்தியா நீண்டகாலத்திற்கு சகித்துக்கொள்ளாது எனவும் எச்சரித்துள்ளார்.

---

பேச்சுவார்த்தைக்கான

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

கலந்தாலோசித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். புலிகளுடனான போரில் தேசிய வருமானத்தின் பெரும்பங்கு அநியாயமாக செலவாகிறதென்றும், பொருளாதாரரீதியில் சிறிலங்கா முன்னேறுவதானால்தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என பிரதம மந்திரி கூறியதை சுட்டிக்காட்டிய திரு. தொண்டமான், அரசின் இந்த நிலைப்பாடு இனப்பிரச்சினையைதீர்க்கவேண்டிய அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் சிங்கள மக்களுக்கு உணர்த்தியிருக்குமென எடுத்துரைத்தார்.

---

கடமைக்கு

கம் அறிவித்துள்ளது. இவ்வாறு செய்யத் தவறுவோர் தாமாகவே வேலையில் இருந்து விலகியவர்களாக்க கருதப்படுவார்கள் என்றும் அரசாங்க அறிவித்தலில் மேலும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இவ் ஊழியர்கள் தமது வேலைத்தலமல்லாத வேறு இடங்களில் பெறும் சம்பளம் மற்றும் கொடுப்பனவு உடனடியாக நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## தப்பி ஓட்டம்

தமிழ் நாட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த இருவர் உட்பட எட்டுப் பேர் வேலூர் சிறைச்சாலையிலிருந்து நேற்று முன்தினம் மாலை தப்பிச் சென்று விட்டனர்.

---

காங்கேசனில்

தலைமையகத்தில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினருக்கும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் இவ்விணக்கம் காணப்பட்டது. விடுதலைப்புலிகளுடன் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி இது தொடர்பாய்பேச்சுவார்த்தை நடத்தியமை தெரிந்ததே.

கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உணவுப் பொருள்களை ஏற்றுவதற்கு லொறிகள் செல்லும் வழிகள் அவற்றின்பாதுகாப்பு, சென்று வரும் நேரம் என்பன குறித்துப்பேசி இணக்கம் காணப்பட்டது. இதன் பிரகாரம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின்பாதுகாப்புடன் கீரிமலை- காங்கேசன்துறைவீதி துறைமுகத்திற்கு லொறிகள்சென்று வருவதற்கும் காலை 7 மணியில் இருந்து மாலை 6.00 மணிவரையிலும் அவை சென்று வரலாம் என்பதிலும் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிகின்றது.

---

# 3 சாம் ஏவுகணைகள் புலிகள் கொள்வனவு

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் விமானங்களைத் தாக்கக் கூடிய மூன்று சாம் ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்ததாக தமிழக பொலிஸ்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த வருடம் மார்ச் மாதத்திற்கும் மே மாதத்திற்குமிடையிலேயே புலிகள் இவற்றைக் கொள்வனவு செய்துள்ளனர் எனவும் அதற்கான ஆதாரங்கள் அடங்கிய டயறி ஒன்று தம்மிடம் அகப்பட்டுள்ளதாகவும் தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ் காவலிலிருந்து சுதர்சன் தப்பினார்

(சென்னை)

விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்களில் ஒருவரான சுதர்சன் பொலிஸ் காவலிலிருந்து தப்பிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பத்மநாபாவின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சுதர்சன் பொலிசாரால் தேடப்பட்டு வந்தார்.

ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புடையவராகக் கருதப்பட்ட ஒற்றைக்கண் சிவராசனின்நெருங்கியசகபாடி சுதர்சன் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உத்தியோகத்தர்களும் சைக்கிளில் செல்ல தடை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலிருந்து வவுனியா நகரப்பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் அரசாங்க ஊழியர், மாணவர்களும் கூட சைக்கிளில் பயணம் செய்வதற்கு சிறிலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது.

நாவலிருந்து பேயாடி கூழாங்குளம்வரை இராணுவத்தால் அங்கீகரிக்கப்பட்ட லொறிகளிலும் பஸ்களிலும் பிரயாணிகள் பயணம் செய்வதற்கு இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

தவிர, வடபகுதியிலிருந்து செல்லும் பிரயாணிகளில் காலவாசிப் பேரே வவுனியா நகரம் செல்ல நாளாந்தம் அனுமதிக்கப்படுகின்றனர்.

(தி)

# தமிழகத்தில் வெள்ளம்; 28 பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் பலத்த மழை பெய்து வருவதன் காரணமாக இதுவரை உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 28 எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காரைக்காலில் சுமார் 50 கிராமங்கள் புயல் காரணமாக தொடர்பின்றி துண்டிக்கப்பட்டுள்ளன.

சென்னையில் புகையிரத சேவைகள் பல ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளைபெங்களூரில் வான்நிலை மோசமாக இருப்பதால் விமானங்கள் இறங்கவோ புறப்படவோ முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# லலித் - காமினி வழக்கு; டிசம்பர் 3 இல் தீர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து லலித் அத்துலத் முதலி குழு வெளியேற்றப் பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு டிசம்பர் 3 ஆம் திகதி வழங்கப்படும்.

முன்னாள் அமைச்சர்கள் லலித், காமினி, பிரேமச்சந்திரா உட்பட எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்த வழக்கு விசாரணை நடந்த புதனன்று உயர் நீதிமன்றத்தில் முடிவுற்றது.

வழக்கில் அதிருப்தியாளர் தோல்வியடைந்தால், இவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள். வெற்றியடையும் பட்சத்தில் ஐ. தே. கட்சிக்குள் அதிருப்தியாளர் தனிக்குழுவாக இயங்கலாம். இது கட்சிக்குள் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# அம்புலன்ஸ் பற்றாக்குறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரி, போதனா வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படவுள்ள இந்தச் சமயத்தில் அங்கு அவசர தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய அம்புலன்ஸ் வண்டிகள் போதியளவில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# வயிற்றோட்டம்; சிறுமி பலி

(யாழ்ப்பாணம்)

வயிற்றோட்டத்தினால் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். கனகரெத்தினம் மத்தியமகா வித்தியாலயத்தில்தங்கியிருந்த புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச்சேர்ந்த சிவரெத்தினம் சுவீதா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் இரு தினங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த பின்னரே உயிரிழந்தார்.

(22)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.